பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ நிலையங்களில் 10 காசு

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 17 (2—9—72) சனி

வெளியூர்: ஆவணி 18 (3—9—72) ஞாயிறு [இதழ்: 68

## ஆசிரியர் தினம்

ஆசிரியர்களின் நலனே நாட்டின் நலம்!

ஆண்டுதோறும் செப்டம்பர் ஐந்தாம் நாளை இந்நாட்டு மக்கள் ஆசிரியர் தின நாளாகக் கொண்டாடுவது கடமையாகும்.

இந்நன்னாளில் மக்கள் அனைவரும் மனமுவந்து தேசிய ஆசிரியர் நல நிதிக்கும் பொருளுதவி வழங்குமாறு வேண்டுகிறோம்.

### இராயப்பா பற்றிய இரகசியக் குறிப்பேடுகள்

# தலைமை நீதிமன்றத்தில் தாக்கல்

## முன்னாள் தலைமைச் செயலர்ளரின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தவறானவை-மறுப்புக்குரியவை

## முதலமைச்சர் கலைஞர்-- அமைச்சர்கள்-- தலைமைச் செயலாளர் ஆகியோரின் பிரமாண வாக்குமூலங்கள் தாக்கல்

### தலைமை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் குடியரசுத் தலைவர்-- முன்னாள் ஆளுநர் உஜ்ஜல் சிங்-- பக்தவத்சலம்--வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் கெய்வார் ஆகியோரின் குறிப்புக்கள்

சென்னை, செப். 2—

தலைமை நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் இ. பி. இராயப்பா ஐ.ஏ.எஸ். தாக்கல் செய்திருந்த 'ரிட்' மனுவில் கூறப்பட்டிருப்பவை அனைத்தையும் -- தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் -- நேற்று தலைமை நீதிமன்றத்தில் தந்த பிரமாண வாக்குமூலத்தில் (அபிடவிட்டில்) மறுத்திருக்கிறார்.

அதுபோன்றே தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் பி. சபாநாயகம் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும், 'இராயப்பா கூறியிருப்பவை அனைத்தும் ஆதாரமற்றவை' என்று மறுத்திருக்கிறார்.

தலைமைச் செயலாளர் பி. சபாநாயகம் தந்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் இ. பி. இராயப்பாவைப் பற்றி இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி -- முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் -- வருவாய்த் துறை வாரிய முதல் உறுப்பினர் கெய்வார் ஆகியோர் எழுதியுள்ள இரகசியக் குறிப்புக்கள், தலைமை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

தமிழக அமைச்சர்கள் என். வி. நடராசன், திருமதி சத்தியவாணிமுத்து, ப. உ. சண்முகம், செ. மாதவன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, சி. பா. ஆதித்தனார் ஆகியவர்களும் -- தமிழ்நாடு அரசின் இரு உயர்தர அதிகாரிகளும், இ. பி. இராயப்பாவின் குற்றச்சாட்டுக்களை மறுத்து பிரமாண வாக்குமூலங்கள் தாக்கல் செய்திருக்கின்றனர்.

## முதலமைச்சர் கலைஞர் மறுப்பு

இ. பி. இராயப்பாவின் குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றையும் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மறுத்திருக்கிறார்; தமது முன்னாள் தனிச் செயலாளர் எம். வைத்தியலிங்கத்திற்கு ஐ.ஏ.எஸ். பதவி பெற்றுத் தருவதற்குத் தாம் ஆவல் காட்டவில்லை என்றும், தேர்வுக்கு ஆதரவாக ஒழுங்கீனமான நடவடிக்கைகள் எதையும் தாம் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"அண்ணா கல்லறையை நிர்வகிக்கக் குழு ஒன்றை அமைக்கும் பொருட்டு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க மறுத்ததால் தாம் அவர்மீது கோபமடைந்ததாகக் கூறுவதும் தவறாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சேலத்தில் நடந்த மத-எதிர்ப்பு ஊர்வலத்தையொட்டிப் பெரியார் ஈ. வெ. ரா. மீது வழக்கு ஒன்றைப் பதிவு செய்வது சம்பந்தப்பட்டவரையில், 'துக்ளக்' பத்திரிகையைப் பறிமுதல் செய்வதாக இருந்தாலும் சரி – அல்லது ஊர்வலத்தில் பங்குகொண்டவர்களின் மீது வழக்குப் பதிவுசெய்வதாக இருந்தாலும் சரி – சட்டத்தை மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்குமாறு இராயப்பாவைத் தாம் கேட்டுக்கொண்டதாகவும், வழக்கைப் பதிவு செய்ததற்காக இராயப்பா மீது தாம் கோபப்படவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

சட்டமன்றத் தேர்தலின்போது தமது தொகுதியில் குண்டர்களைக் கைது செய்ததற்காகத் தாம் கோபப்பட்டதாகக் கூறப்பட்டதையும் முதலமைச்சர் மறுத்தார். இராயப்பா கூறியுள்ளவாறு சென்னை நகருக்குத் தாம் குண்டர்களை வரவழைக்கவோ அல்லது குண்டர்களுக்குத் தமது தொகுதியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யவோ இல்லை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## தலைமைச் செயலாளர் பி. சபாநாயகம் மறுப்பு

இவ்வழக்கில் முதலாவது எதிர் மனுதாரராகச் சேர்க்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் பி. சபாநாயகம் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதாவது:—

"இந்த வழக்கையொட்டிய ரிக்கார்டுகள் அனைத்தையும் பரிசீலித்து அறிந்தேன்; மனுதாரரின் மனுவையும் பரிசீலித்துப் பார்த்தேன்; 'ரிக்கார்டு' பூர்வமாக உள்ளவற்றைத் தவிர மற்ற குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றையும் மறுக்கிறேன்.

அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை உட்படுத்துவதாக இது இல்லை என்பதால், இந்த 'ரிட்' மனு ஏற்கத்தக்கது அல்ல.

மனுதாரர் கொடுத்துள்ள மனுவில் அரசியல் சட்டத்தின் 14, 16, 19-வது பிரிவுகளை மீறப்பட்டுள்ளதற்கான ஆதாரங்கள் ஏதும் கூறப்படவில்லை.

மனுதாரர் கூறுவதுபோல நியாயமில்லாத முறையில் நடத்தப்படுவதற்காக அவர் தனிமைப்படுத்தப்படவில்லை.

ஆக, அரசியல் சட்டத்தின் 14, 16-(1) விதிகள் மீறப்படவில்லை.

ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி -- என்ற முறையில் அவர் பணியாற்ற அவருக்குள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை; ஆகவே, அரசியல் சட்டத்தின் 19-(1)-ம் மீறப்படவில்லை.

இக்காரணங்களாலும், மேலும் இந்த வாக்குமூலத்தின் பிறிதோர் இடத்தில் விளக்கமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ள காரணங்களாலும், இந்த மனுதாரர் அரசியல் சட்டத்தின் 32-வது பிரிவு வழங்கும் அசாதாரணமான 'ரிட்' அதிகாரத்தின் கீழ் நீதிமன்றத்தை நாட முடியாது.

இது ஒருபுறமிருக்க, மனுதாரர் (இராயப்பா) இந்த நீதிமன்றத்தை அணுகுமுன் சட்டபூர்வமாகச் செய்துகொள்ள வேண்டிய இதர முறையீடுகளைச் செய்து முடிக்கவில்லை.

திரு. சி. ஏ. இராமகிருஷ்ணனுக்குப் பதிலாக 1969 நவம்பர் 13-ந் தேதி முதல் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகப் பணியாற்றும்படி கூறப்பட்டார்; அது ஒரு இடைக்கால ஏற்பாட்டுத் தன்மையுடையதே; தலைமைச் செயலாளர் என்பதாகச் சட்டபூர்வ உரிமை எதுவும் புதிதாக வழங்கப்படவில்லை.

1971 மார்ச் மாதத்தில், புதிதாக அமைந்த அரசு, தமிழ்நாட்டில் திட்டக் குழு ஒன்றை அமைப்பதென்று தீர்மானித்தது; இது பற்றிய அறிவிப்பு 24—3—71 அன்று மாநில ஆளுநர் சட்டப் பேரவையில் ஆற்றிய உரையில் அடங்கியிருந்தது.

இத்தீர்மானத்தின்படி, மனுதாரர் நீண்ட நிர்வாக அனுபவமுடையவராதலால் திட்டக் குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

'திட்டக் குழுத் துணைத் தலைவர்' என்ற பதவியை அரசு தனக்குள்ள அதிகாரத்தின்படி— 1954-ம் ஆண்டின் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சட்டத்தின்படி உருவாக்கியது; இந்தப் பதவிக்கான தகுதியும் -- ஊதியமும் தலைமைச் செயலாளருக்கு உள்ளதைப் போன்றதாகவே இருந்தது.

1971 ஏப்ரல் 8-ந்தேதி இராயப்பா, தமது புதிய பணியில் கண்ணும் கருத்துமாக ஈடுபடத் தொடங்கி விட்டார் என்ற செய்தி ஏடுகளில் வெளியாயிற்று என்றாலும் -- செய்தியாளர்களிடம் அவர் பேசிய நேரத்தில், தமக்கு ஓர் அறைகூவலான பணியாயினும் திட்டக் குழுவின் துணைத் தலைவர் பணியை நிறைவேற்ற இயலும் என்று தாம் நம்பிக்கையோடிருப்பதாக அவர் அறிவித்தாரென்றாலும் -- அப்பணியை அவர் ஏற்றுக் கொள்ளாமல், நான்கு மாதங்கள் விடுப்பில் சென்றார்.

திட்டக் குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதை அவர் எதிர்க்கவில்லை; ஓராண்டுக் காலம் அவர் வெறுமனே இருந்தார்; 1972 ஜூன் முதல் வாரத்தில் தாம் வேலைக்குத் திரும்ப விரும்புவதாக அரசுக்குத் தெரிவித்தார்.

ஆக, ஜூன் 6-ந் தேதி தலைமைச் செயலாளருக்கான ரூ. 3,500 மாதச் சம்பளத்தில் திட்டக் குழுத் துணைத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்; 7-ந் தேதி அவர் வேலையில் சேர்ந்தார்.

இங்கே விளக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக ஜூன் 27-ந் தேதி, மாநிலப் பொது விற்பனை வரிச் சட்ட அமைப்பைச் சீரமைத்து எளிதானதாகச் செய்ய அவரை -- சிறப்புப் பணியில் ஈடுபட்டுள்ள தனி அதிகாரியாக (தலைமைச் செயலாளருக்குரிய அதே ஊதியத்தில்) அரசு நியமித்தது; இந்த நியமன உத்தரவையே இராயப்பா, இப்போதைய 'ரிட்' மனு மூலம் எதிர்க்கிறார்."

## குடியரசுத் தலைவர் வி. வி. கிரி கடிதம்

பிரமாண வாக்குமூலத்தில் இணைக்கப்பட்டுள்ள குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் 10—1—71 தேதியிட்டு கொழும்பிலிருந்து எழுதிய கடிதம் வருமாறு:—

எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய நண்பரே!

"சனவரி 7-ந் தேதி தங்களது செய்தி கிடைக்கப் பெற்றேன்; அதற்காகத் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தனிப்பட்ட முறையில் தங்கள்பால் எனக்கு மிக உயர்ந்த மரியாதை உண்டு என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

மிகப் பெரும் சிறப்புக்களுக்கும் -- குறிப்பாக மற்றவர்கள்மீது மரியாதையும், மதிப்பும் காட்டும் தங்களது உள்ளார்ந்த உணர்வை நான் எப்போதும் உணர்ந்துள்ளேன்.

### இலட்சியங்களின் உணர்வைப் பெற்றிருந்தாரா?

இந்தத் துறையில் தங்களது உதாரணம், அதிகாரத்தில் உள்ளவர்கள் பின்பற்றக்கூடிய தகுதி பெற்றது.

உங்களது தலைமைச் செயலாளருக்கு இதுபோல ஒரு புகழ்ச்சியைத் தரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஆனால், தங்களது இலட்சியங்களின் உணர்வை அவர் பெறவில்லை என்பதை அறிந்து ஏமாற்றமடைந்தேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

# நாகப்பட்டினம் துறைமுகம் வழியாகக் கப்பல் போக்குவரத்து

## 'நிறுத்திவிடும் எண்ணம் மத்திய அரசுக்கு உண்டா?'

### நாடாளுமன்ற மேலவையில் தி. மு. கழக உறுப்பினர்கள் கேள்வி--வதந்திகளுக்கு மத்திய அமைச்சர் மறுப்பு

புதுடில்லி, செப். 2

"நாகப்பட்டினம் துறைமுகம் வழியாகச் சரக்குக் கப்பல்கள் – பயணிகள் கப்பல்கள் போக்குவரத்தை நிறுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை; இதுபற்றி ஏதேனும் சந்தேகமோ அல்லது வதந்தியோ இருந்தால் அது தவருனதாகும்"

என்று நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் தில்லை வில்லாளனின் அவசரக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் தெரிவித்தார்.

கழக உறுப்பினர்கள் கே. ஏ. கிருஷ்ணசாமி, எம். கமலநாதன், எஸ். எஸ். மாரிசாமி ஆகியோர் கேட்ட துணைக் கேள்விகளில், 'நாகப்பட்டினம் வழியாகப் பயணிகள் கப்பல் போக்குவரத்தை நிறுத்த அரசு எண்ணியிருப்பதாக இடைவிடாமல் வதந்திகள் பரவி வருகின்றன' எனக் குறிப்பிட்டனர்.

"இந்த வதந்திகளையெல்லாம் நாம் நம்பிவிடக் கூடாது; இந்த வதந்திகளும் -- சந்தேகங்களும் தவருனவை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்"

என்று அமைச்சர் கூறினர்; அவர் மேலும் கூறியதாவது:—

"நாகப்பட்டினம் துறைமுகத்தில் நிற்கும் இரண்டு கப்பல்கள் பழையனவாகும்; 'ரஜுலா' என்ற கப்பல் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது; ஆனல் 1970-ல் இதில் மாறுதல்களும் -- மேம்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

மற்றெரு கப்பல் -- கப்பல்போக்குவரத்துக் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான 'ஸ்டேட் ஆப் மதராஸ்' என்பதாகும்; இதுவும் பழமையானதுதான்; இந்தக் கப்பலுக்குப் பதிலாக வேறு ஒரு கப்பலை விடுவதற்கு அரசு எண்ணியிருக்கிறது; உரியதோர் கப்பல் கிடைத்த பிறகே இதை நிறுத்த வேண்டும் என்று அரசு திட்டவட்டமாக உத்தரவிட்டிருக்கிறது.

ஆட்சேபனை மனுக்கள் ஏதாவது வந்திருக்கிறதா என்று கண்டறியுமாறு கப்பல் போக்குவரத்து இயக்குநரையும்--கப்பல் போக்குவரத்துக் கார்ப்பரேஷனையும் -- தமிழ்நாடு அரசையும் மத்திய அரசு கேட்டது; ஆனல், இது பற்றி அவர்களுக்குத் தகவல் எதுவுமில்லை என்று தெரியவருகிறது."

துறைமுகம் வழியாக நடந்து வரும் போக்குவரத்தை நிறுத்தும் பிரேரணை எதுவுமில்லை; தமிழ்நாடு வர்த்தகசபையிடமிருந்தோ அல்லது தமிழ்நாடு அரசிடமிருந்தோ எங்களுக்கு ஆட்சேபனை எதுவும் வரவுமில்லை.

நாகப்பட்டினத்திலிருந்து கப்பல்கள்விடத் தமிழ்நாடு அரசிடமிருந்து ஏதாவது பிரேரணை வருமானல் மத்திய அரசு பரிசீலிக்கும்.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் போக்குவரத்தை அதிகரிக்கும் பொருட்டு அந்தப் பகுதியில் பொருளாதார திட்டங்களைத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம் இந்தத் துறைமுகம் ஒரு நடுத்தர துறைமுகமாதலால், இது மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது.

"செயற்கைத் துறைமுகம் ஒன்றை அமைத்து இதை ஒரு பெரிய (மேஜர்) துறைமுகமாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா"

என்று, கமலநாதனும் -- மாரிசாமியும் -- அப்துல் சமதும் (முஸ்லிம் லீக்) கேட்டனர்; அதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"தமிழ்நாடு அரசிடமிருந்து பிரேரணை எதுவும் வரவில்லை; தூத்துக்குடி துறைமுகத்தை மேம்பாடு செய்ய வேண்டுமென்று, தமிழ்நாடு அரசு விரும்பியது; அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது; வேறு எந்தத் துறைமுகத்தையாவது மேம்பாடு செய்யவேண்டுமென்று தமிழ்நாடு அரசு விரும்புமானல், அதற்கான பிரேரணையை அது அனுப்பிவைத்தாக வேண்டும் அதை மத்திய அரசு பரிசீலிக்கும்."

# தமிழக அரசிடமிருந்து கோரிக்கை வருமானல்....

'எங்களுக்குத் தெரிந்த வரையில் எந்த மாறுதலும் செய்யும் நிலையில் இல்லை என்று நான் உறுதி கூறமுடியும்; இந்தத்

# கிராக்கிப்படி உயர்வு பிரச்சினை

## ஊதியக் குழுவின் பரிசிலனையில் இருக்கிறதாம்

புதுடில்லி, செப். 2—

"மத்திய அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் அல்லது அதிகப்படியான கிராக்கிப்படி கொடுக்கும் பிரச்சினை ஏற்கனவே ஊதியக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது"

என்று மக்களவையில், நிதித்துறை இணையமைச்சர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"ஜுலை மாதத்திற்கான விலைவாசிக் குறியீட்டு எண் இந்த மாதம் முதல் வாரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது; என்றாலும், அரசு முன்னதாகவே இதை ஊதியக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது; சாதாரணமாக இந்தப் புள்ளி விவரங்களைத் தயாரிக்க ஐந்தாறு வாரங்கள் ஆகும்."

"கிராக்கிப் படியை உயர்த்த வேண்டுமென்று ஊதியக் குழு சிபாரிசு செய்து அரசும் அதை ஒப்புக் கொண்டால் அதற்கு நிதி ஒதுக்குவதில் ஒரு சிரமமும் இருக்காது" என்று மற்றெரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறினர்.

"நவராத்திரி விடுமுறைக்கு முன்பு இதுபற்றி ஒரு முடிவு செய்யப்பட்டுவிடவேண்டும்" என்று எஸ்.எம். பானர்ஜி வற்புறுத்தினர்

"மாநில அரசு ஊழியர்களின் கிராக்கிப் படிகளையும் உயர்த்துவது சம்பந்தமாக மாநில அரசுகள் கலந்தாலோசிக்கப்படுமா?" என்று உறுப்பினரொருவர் கேட்டார்.

ஆனல், அவைத்தலைவர் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

# சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட பொருள்கள்

## சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்

புதுடில்லி, ஆக. 31—

இவ்வாண்டு ஜுன் திங்களில் சட்ட விரோதமாகக் கடத்தப்பட்ட ரூ. 1.80 கோடி மதிப்புள்ள பொருட்களைச் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் ரூ. 1.49 கோடி மதிப்புள்ளவை கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப்பட்டவையாகும்; இதில் தங்கத்தின் மதிப்பு மட்டும் ரூ. 7 இலட்சமாகும்.

இந்த மாதத்தில் ரூ 26 இலட்சம் மதிப்புள்ள கைக்கடிகாரங்களும், ரூ. 72 இலட்சம் மதிப்புள்ள செயற்கை இழைகள் -- துணிகள் போன்றவையும், ரூ. 44 இலட்சம் மதிப்புள்ள பிற பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஏற்றுமதி செய்யப்படவிருந்த பொருட்களில் பறிமுதல் செய்யப்பட்ட அபாயகரமான மருந்துப் பொருட்களின் மதிப்பு ரூ.3 இலட்சமாகும்.

ஜுன் மாதத்தில் ரூ 19 இலட்சம் மதிப்புள்ள ரொக்கமும், ரூ 9 இலட்சம் மதிப்புள்ள வாகனங்கள் -- விசைப் படகுகள் போன்றவையும் கைப்பற்றப்பட்டன.

# பாம்பு கடிக்குப் புதிய சிகிச்சை

## உலகிலேயே இல்லாதது

புதுடில்லி, ஆக. 30—

"பாம்பு கடிப்பதால் ஏற்படக்கூடிய மூடக்குவாதம் போன்ற நோய்களை, 'இடேஸ்டிக்மைன்' என்னும் புதிய மருந்தைப் பயன்படுத்தி குணமாக்கி விடலாம்"

என்று டில்லியிலுள்ள சம்தர்ஜங் மருத்துவமனை டாக்டர்கள் நிரூபித்துள்ளனர்.

அவர்கள் இந்தப் புதிய மருந்தைப் பயன்படுத்தி 10 நோயாளிகளைக் குணப்படுத்தி இருப்பதாகத் தெரிவித்தனர்.

"இதுபோன்ற சிகிச்சை உலகிலேயே இதுவரை அளிக்கப்பட்டதில்லை" என்று அவர்கள் கூறினர்.

# பர்மா -- இலங்கை அகதிகளுக்குத் தொழில் கடனுதவி

சென்னை, ஆக. 31—

அகதிகளுக்கான கூட்டுறவு நிதியுதவி மற்றும் வளர்ச்சி வங்கியிடமிருந்து தொழில் நடத்துவதற்காகக் கடனுதவி பெற விரும்பும் பர்மா -- இலங்கை அகதிகள், தங்கள் மனுக்களை, '45 தியாகராயர் சாலை, சென்னை-17' என்ற முகவரியில் அமைந்திருக்கும் வங்கிக்கு அனுப்பவேண்டும்.

அகதிகள் இந்தியா வந்தடைந்த மூன்றாண்டுகளுக்கு உள்ளாகவோ அல்லது 1972 நவம்பர் 19-ம் தேதிக்கு முன்னதாகவோ (இதில் எது பிந்தியதோ அதற்குள்) மனுக்கள் அனுப்பப்படவேண்டும்.

இந்தக்கால வரம்புக்குப் பின்னர் அனுப்பப்படும் மனுக்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

# வேளாண்மை விளைபொருட்கள்

## விற்பதற்கு வசதியாக இணைப்புச் சாலைகள்

சென்னை, ஆக. 31—

"விவசாயிகள், தங்கள் விளைபொருட்களை நியாய விலைக்குக் காலா காலத்தில் விற்பதற்கு வசதியாகக் காவிரிப் பாசனப் பகுதியில் ஆறு இடங்களில் அமையவிருக்கும் மண்டிகளுக்கு இணைப்புச் சாலைகள் போடவும் - ஏற்கனவே உள்ளவற்றை மேம்பாடு செய்யவும் ரூ 60 இலட்சம் செலவிடப்படும்"

என்று நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் தில்லைநாயகம் தெரிவித்தார்.

தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை -- திருத்துறைப்பூண்டி -- குற்ருலம் -- தஞ்சாவூர் -- காட்டுமன்னார்கோவில் ஆகிய இடங்களிலும், திருச்சி மாவட்டத்தில் மண்ணச்சநல்லூரிலும் இந்த மண்டிகள் ஏற்படும்.

1,500-க்குமேல் மக்கள் தொகையுள்ள 3,965 கிராமங்களுக்குச் சாலை வசதி செய்துதரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இவ்வாண்டில் இதற்கென ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; இதில் பாதியை மத்திய அரசு தரும்.

கிராமப்புற வேலைத் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் ரூ 75 இலட்சம் செலவில் சாலைகள் போடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவை மூன்ருண்டுகளில் முடியும் என்றும் கூறினர்.

# ஆயுள் தண்டனை 3 ஆண்டுகளாகக் குறைந்தது

## 'நோயினல் இறந்தானே தவிரகாயத்தினல் இல்லை' என நீதிபதிகள் தீர்ப்பு

சென்னை, ஆக. 27—

சென்னை உயர் நீதிமன்றத்தில், நீதிபதிகள் கே. நாராயணசாமி—வி. எஸ். இராகவன் ஆகியோர், குற்றவாளி ஒருவருக்கு விதிக்கப்பட்டிருந்த ஆயுள் தண்டனையை மூன்று ஆண்டுகளாகக் குறைத்தனர்.

"குற்றவாளி, இறந்தவனுக்கு ஏற்படுத்திய காயத்தினல் மரணம் சம்பவிக்கவில்லை; பின்னிட்டு ஏற்பட்ட 'பெரிடானிஸ்' எனும் நோயினல் ஏற்பட்டது" என்று காரணம் கூறினர்.

சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த வில்லியநல்லூர் கிராமத்தில், தொப்புளான் எனும் இராமச்சந்திரன் 29—1—71 அன்று இரவு 8-மணிக்கு மனராசு என்பவனைக் கத்தியால் வயிற்றில் குத்திவிட்டான்.

குத்தப்பட்ட மனராசு கடலூர் மருத்துவமனையில் 2—2—72 இரவு 10-மணிக்கு இறந்துவிட்டான்.

வழக்கை விசாரணை செய்த கடலூர் செஷன்சு ஜட்ஜ் சிங்காரவேலு, 20—12—71-ல் குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை விதித்தார்.

உயர் நீதிமன்ற மேல் விசாரணையில் குற்றவாளிக்காக வழக்கறிஞர் தில்லை வில்லாளன் வாதாடினர்: அவருடன் ஸ்டானிஸ்லாஸ், சண்முகம் ஆகியோரும் ஆஜராயினர்.

# சென்னை நகரில் கண்காட்சி

## சிறப்புமிக்க நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன

சென்னை, செப். 1—

சென்னை எஸ் ஐ ஏ.ஏ. திடலில் இப்போது நடைபெற்றுவரும் நகரப் பொழுதுபோக்குக் கண்காட்சியில், முதன்முதலாக 'ரோப் டிரெய்ன்' (மேலே கம்பியில் ஓடும் இரயில்) அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

"மக்களைக் கவரும் இந்த இரயிலில் ஏறிச் செல்வதற்கு மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது" என்று கண்காட்சி நிர்வாகி பலராமன் தெரிவித்தார்.

மற்றும், மத்திய அரசின் தகவல் பிரிவும், இரஷ்யா -- ஜப்பான் நாடுகளைப் பற்றிய விளக்க அரங்கங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

நாள்தோறும் நாடகங்கள் -- இலவசத் திரைப்படக் காட்சிகளும் நடைபெறுகின்றன.

பீங்கான் பிளேடுகள்--மின்சாரப் பல்புகள் ஆகியவற்றைக் கடித்துத் தின்று விழுங்கும் இளைஞர் காலித்தின் பிரமிக்கத்தக்க செயல்களும் நாள்தோறும் நடைபெறுகின்றன.

# சமரசப்பேச்சு நடத்தும் பிரச்சினையில் சமத்துவ நிலை எழக்கூடாதாம்

## புதிய சகாப்தம் தொடங்குவதற்கு பிடிவாதப் போக்கு கூடாதாம்

### வங்க தேச உறவு பற்றிப் பூட்டோவின் விசித்திரக் கூற்று

கராச்சி, செப். 2—

"பாகிஸ்தான் -- வங்க தேசத்துக்கிடையே எதிர்கால உறவுகள் பற்றி டாக்காவிலுள்ள அதிகாரிகளுடன் தான் பயனுள்ள முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்த விரும்புகிறோம்"

என்று பூட்டோ, கராச்சி உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் அளித்த விருந்தொன்றில் பேசுகையில் கூறினர்; அவர் மேலும் கூறியதாவது:—

"நம்மிருவருக்கிடையே உள்ள தவருன எண்ணங்களைப் போக்குவதற்கு அது ஒன்றுதான் வழி; சென்ற காலத்தில் செய்யப்பட்ட தவறுகளை நாம் ஒப்புக்கொள்கிறோம்; நேருக்கு நேர் சந்தித்து அதைப்பற்றியெல்லாம் விவாதிப்போம்; நீக்குப் போக்குடன் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்குவோம்.

பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்பு வங்க தேசத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது; சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பிரச்சினையில், சமத்துவம் என்ற பிரச்சினை எழவில்லை; ஆகவே, ஷேக் முஜிபுர் ரகிமான், தனது பிடிவாதத்தைக் கைவிட்டு, என்னுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும்."

# நிலைமையைப் பாகிஸ்தான் நன்கு உணர்ந்துள்ளது

## நாடாளுமன்ற மேலவையில் சுவரண் சிங் தகவல்

புதுடில்லி, செப். 2—

வங்காள தேசத்தைப் பாகிஸ்தான் அங்கீகரிக்கும் நிலை பற்றி நாடாளுமன்ற மேலவையில், வெளிநாட்டுத் துறை அமைச்சர் சுவரண் சிங் கூறியதாவது:—

"இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் போர்க் கைதிகளைத் திரும்பப் பெறவேண்டுமானல், வங்காள தேசத்தை அங்கீகரித்தே தீரவேண்டும் என்பதைப் பாகிஸ்தான் உணர்ந்திருக்கிறது.

'வங்காள தேசத்தை அங்கீகரிப்பது பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகிறோம்' என்று இந்தியாவிடம் பாகிஸ்தான் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

## ஒப்பந்த விதிகளைப் பாகிஸ்தான் கடைபிடிக்கும்

சிம்லா ஒப்பந்தம் மற்றியும், இந்தியா -- பாகிஸ்தான் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்பாடு மற்றியும் பாகிஸ்தான் முரணன செய்திகளை ஒலிபரப்புகிறது; ஆனல் அதுபற்றி நாம் கவலைப்படக் கூடாது.

ஒப்பந்த விதிகளைத்தான் பாகிஸ்தான் கடைபிடிக்குமே தவிர, வானெலியில் கூறப்படும் விதிகளை அல்ல.

## வெளிப்படையாக அறிவிப்பேன்

ஒப்பந்தத்தில் ஒன்றைக் கூறிவிட்டு நடைமுறையில் இன்னென்றை பாகிஸ்தான் செயல்படுத்தினல், இந்தியா அதனைப் புரிந்துகொள்ளும்.

பாகிஸ்தான் ஏமாற்றினல் நான் இந்த அவையில், 'பாகிஸ்தான் நழுவுகிறது' என்பதை வெளிப்படையாக அறிவிப்பேன்.

போரின்போது, பாகிஸ்தானிலிருந்து பாகிஸ்தான் குடிமக்கள் இந்தியாவுக்கு ஓடிவந்தார்கள்; அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வது பாகிஸ்தானின் பொறுப்பாகும்."

# மேட்டுப்பாளையம் மாணவர் இலக்கிய மன்றம்

மேட்டுப்பாளையம் அண்ணு தமிழ்க் கல்லூரி மாணவர் இலக்கிய மன்றத்திற்கு புலவர் நிறைநிலை வகுப்பு மாணவர் ம.சி. இராமலிங்கம் செயலாளராகவும்; துணைச் செயலாளராக செல்வி பாஞ்சாலியும், மாணவர்த் தலைவராக ப. இராசகோபாலசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# வேலை வாய்ப்புத் திட்டம்

## நிதியுதவிகள் பற்றி விளக்கம்

திருச்சி, ஆக. 31—

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், தொடக்கக் கல்வியைப் பரவலாக்கவும் மத்திய வேலை வாய்ப்புத் திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியிருக்கிறது! இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் மாநிலங்களுக்கு இதற்கான முழுச் செலவையும் மத்திய அரசே அளிக்கும்.

### புதிய நியமனங்கள்

இதன்கீழ் 1972—73-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் 900 பி டி ஆசிரியர் நியமிக்கப்படுவர் சுமார் 1,000 வகுப்பறைகள் கட்டித் தரப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில், 'கை வேலை' ஆசிரியர்களை நியமிக்கவும் -- மதிய உணவுத் திட்டத்திற்குத் துணை புரியவும் -- இதர சில வசதிகளைச் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்படும்; இந்தத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 30 இலட்சத்திற்கு மேல் செலவாகும்.

இந்த மத்திய வேலைவாய்ப்புத் திட்டப்படி, தமிழ்நாட்டில் 1972—73-ம் ஆண்டில் 900 பி டி. ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்படுவர். (1971—72) அங்கீகாரம் அளிக்கப்பட்ட 900 நியமனங்கள் இந்தக் கணக்கில் சேராது; இப்போது அறிவிக்கப்பட்டுள்ளவை புதிய நியமனங்களாகும்.)

இதன்படி, நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் -- ஆசிரியைகளாக 900 பி.டி. ஆசிரியர்களை நியமிக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது; ரூ 275—10—375—15—450 என்னு விகிதத்தில் இவர்களுக்கு ஊதியம் அளிக்கப்படும்.

இந்த 900 நியமனங்களை பள்ளிப் படிப்புத் துறை இயக்குநர் மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்வார்; அதற்றை மாவட்டக் கல்வி அதிகாரிகள் தங்கள் மாவட்டங்களில் மறு ஒதுக்கீடு செய்வார்கள்.

பள்ளிகளில் ஆசிரியர்கள் -- மாணவர்கள் விகிதத்தைப் பரிசீலனை செய்து -- அதற்கேற்றவாறு கூடுதலாக பிடி. ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். இதில் பி.டி. படித்தோரை தலைமை ஆசிரியராக அல்லது தலைமை ஆசிரியையாகக் கொள்ளாத நடுநிலைப் பள்ளிகளிலும் அரசாங்கம் அல்லது மாவட்டக் கழகப் பள்ளிகளுக்கே முன்னுரிமை தரப்படும்; பின்னர்தான் தனியார் பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

### வேலை இழக்கும் ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்படுவர்

நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக இந்த பிடி. ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால். இதுவரையில் அந்தப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக இருந்து வந்தவர்கள் இந்தப் பதவிகளை இழக்க நேரிடும்; எனினும், அவர்களும் அதே பள்ளிகளில் 'கூடுதல்' தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்; இதற்கு முன்பு இந்தத் தலைமை ஆசிரியர்கள் வாங்கி வந்த ஊதிய விகிதங்களும் -- அலவன்சும் தொடர்ந்து அவர்களுக்கு வழங்கப்படும்.

### கூடுதல் ஆய்வாளர்கள்

பள்ளிக்கூடங்களுக்கான துணை ஆய்வாளர்கள் (இன்ஸ்பெக்டர்கள்) 7 பேரைக் கூடுதலாக நியமிக்கவும் மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இலவசமாகப் பாட நூல்கள் வழங்க நிதியுதவி

தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட -- மலைசாதியைச் சேர்ந்த 26 928 மாணவ--மாணவிகளுக்குப் பாடம் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், இலவசமாக வழங்குவதற்கு ரூ. 134 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மதிய உணவு நிதி ஒதுக்கீடு

தொடக்கப் பள்ளிகளில் மேற்கொண்டு 29,928 மாணவ -- மாணவிகளுக்கு மதிய உணவு வழங்குவதற்கு ரூ. 1,34,640 மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

### பணிமனைகள் -- கருவிகள்

தவிரவும், 88 நடுநிலைப் பள்ளிகளில் தலா ஒரு கைவேலை ஆசிரியரை நியமிப்பதற்கு மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது

இதற்காகவும் -- பள்ளிகளில் கைவேலைப் பயிற்சி பெறுவதற்காகப் பணிமனைகளை அமைக்கவும் -- உரிய கருவிகளை வாங்குவதற்காகவும் (ஒவ்வொரு பள்ளிகளுக்கும் ரூ. 2000 வீதம்) ரூ. 1.76 இலட்சம் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

### ஊராட்சி -- தனியார் பள்ளிகளுக்கும் உதவி

மற்றும் 973 வகுப்பு அறைகளைக் கட்டுவதற்கு ரூ. 29 19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; இதில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 29 இலட்சமும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ 3 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சென்னை 105-வது வட்ட எம்.ஜி.ஆர்.ரசிகர் மன்றம்

சென்னை — தியாகராயநகர் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற நிர்வாகிகள் தேர்தல், 105-வது வட்டச் செயலாளர் மா. குப்புசாமி தலைமையில் 1—8—72 ல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: பா. அரங்கநாதன்; துணைத் தலைவர்: அ. பூங்காவனம்; செயலாளர்: எல். பாலகிருஷ்ணன்; துணைச் செயலாளர்: தி. விசுவநாதன்; பொருளாளர்: மு. கணேசன்; மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

## பெங்களூர் 20-வது வட்ட தி. மு. கழகம்

13—8—72-ல், பெங்களூர் 20-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் எஸ். ஈ. வேணுகோபால் தலைமையிலும் -- தி. திராவிடமணி எம் எல்.ஏ. முன்னிலையிலும் நடைபெற்றது; அதுபோது, கிளைக் கழகத்தின் காலியான இடத்திற்கு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

தலைவர்: எம். வேணு; செயலாளர்: ஏ. கண்ணன்; பொருளாளர்: சி. பி. முனுசாமி.

கழகத் தோழர்கள் முனுசாமி, சி. பி. தனராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

## நாமக்கல் கவிஞர் மறைவு -- மாணவர் மன்றம் அஞ்சலி

சென்னை, ஆக. 31—

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் மறைந்த செய்தியை அறிந்தவுடன் மாணவர் மன்றச் சார்பில் புலவர் கோ. வில்வபதி -- செயலாளர் புலவர் தணிகை உலகநாதன் ஆகியோர் அவருடைய இல்லம் சென்று மலர் வளையம் வைத்துத் தம் இறுதி மரியாதையைத் தெரிவித்தனர்.

அவர் மறைவால் வருந்தும் குடும்பத்தாருக்கும் -- கவிஞர் உலகிற்கும் மன்றத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

### பேச்சாளர் முகவரி

கா. வையபுரி,
ஆசிரியர், 'மறுமொழி',
தெற்குப் பெருமாள் மேத்திரி [வீதி
மதுரை-1

க. சு. மணிமாறன்,
அண்ணு இல்லம்,
65, கரிவேலன் குண்டு தெரு,
திருநெல்வேலி-6.

கோபி தமிழரசு,
3/35, கருமாயா வீதி,
கோபிசெட்டிபாளையம்

விருதை ஜெயராஜ்,
அண்ணு பதிப்பகம்,
54, தபால் ஆபீஸ் தெரு,
விருதுநகர்


அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

# அரூர் வட்ட இலக்கிய மன்றம்

தர்மபுரி மாவட்டம் அரூர் வட்ட இலக்கிய மன்றத்தின் 10-வது கவிதைப் போட்டியின் விவரம் வருமாறு:—

கவிதை—'சங்க இலக்கியத்தில் இயற்கை' என்ற தலைப்பில் 40 வரிக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

ஒவ்வொரு கவிதையுடனும் கட்டணமாக ரூ. 1 பணமாகவோ -- அஞ்சல் தலையாகவோ அனுப்ப வேண்டும்.

கவிதைக்கு மூன்று பரிசுகள் உண்டு.

கவிதை அனுப்பவேண்டிய இறுதி நாள்: 25—9—1972.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:—வித்துவான் கே. வே. சந்தானம் தலைவர், அரூர் வட்ட இலக்கிய மன்றம், அரூர் (தர்மபுரி மாவட்டம்).

## சென்னை 20-வது வட்ட மு. க. முத்து ரசிகர் மன்றம்

8—8 72-ல், திரு. கி. வளவன் தலைமையில், வட்டச் செயலாளர் சி. சாமிநாதனை ஆணையாளராகக் கொண்டு மு. க. முத்து ரசிகர்கள் மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: ஆறுமுகம்; செயலாளர்: ந யுவராஜ்; துணைச் செயலாளர்: ஈ. சி. ஆறுமுகம்; பொருளாளர்: சு. மனோகரன்; செயற்குழு உறுப்பினர்கள்: கி. திராவிடமணி, ஜி. தேவராஜ், சி. கன்னியப்பன், ஏ. செல்லப்பன், ஈ. மகேந்திரன், எஸ். ஆர். கன்னியப்பன், ஏ. இராசேந்திரன்.

## பம்பாய்--தாராவியில் மதுரை முத்து மன்றம்

பம்பாய்—தாராவியில் மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் பெயரில் தாராவி தி. மு கழகச் செயலாளர் எல். எஸ். செழியன் தலைமையில் முத்து மன்றம் அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: வி. எஸ். சொக்கலிங்கம்; செயலாளர்: பி ஏ. சீனிவாசன்; துணைச் செயலாளர்: வி சந்திரசேகர்; பொருளாளர்: எஸ். வி நாயகம்; செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. திராவிடராசு, இப்ராகிம், இரா. பொங்லான், மதுரை வீரன், பாப்பு ஜே. நெல்சன்.

மன்ற வளர்ச்சி குறித்து தோழர்கள் வி. எஸ். சொக்கலிங்கம், பி ஏ. சீனிவாசன், எஸ் வி. நாயகம் ஆகியோர் பேசினர்.

## திருச்சி 10-வது வட்ட அண்ணு அறிவு வளர்ச்சி மன்றம்

திருச்சி-உறையூர் 10-வது வட்ட அண்ணு அறிவு வளர்ச்சி மன்ற நிர்வாகிகள் தேர்தல் 16—8—72-ல் பி. சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: பி. சம்சுதீன்; செயலாளர்: எம். ஆர். சுவாமி: துணைச் செயலாளர்: அமிர்கான்; பொருளாளர்: எம். என். மூசா; செயற்குழு உறுப்பினர்கள்: ஜி. அப்துல் சமது, சந்தானம், மாணிக்கம், டேவிட், ஜே அமானுல்லா, ஜபார், தஸ்தகீர், முபாரக், அஜ்ஜியான், சிக்கந்தர், எட்வர்டு.

## மேட்டுப்பாளையம் 10-வது வட்ட கலைஞர் மன்றம்

மேட்டுப்பாளையம் 10-வது வட்டத்தில் கலைஞர் மன்றம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: சி. ந. ஆறுமுகம்; துணைத் தலைவர்: கிட்டான் (நகராட்சி உறுப்பினர்); செயலாளர்: புலவர் இராசு; துணைச் செயலாளர்: அன்பன் மொய்தீன்; பொருளாளர்: அ. அங்கமுத்து; மாவட்டப் பிரதிநிதிகள்: கே. மணி, கோபு; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

மாவட்ட அளவில் கலைஞர் மன்றங்களை இணைத்துச் செயல்படுவதென முடிவு செய்யப்பட்டது.

## திருச்சி நகர எம். ஜி. ஆர். தலைமை மன்றம்

13-8-72-ல் திரு. ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி எம்.சி; தலைவர்: பா. பா. சு மணி; துணைத் தலைவர்: பி எம். ஆனந்தன்; செயலாளர்: பி. சுப்பிரமணி; துணைச் செவலாளர்: து. இராசாராம்; பொருளாளர்: கா. அப்துல் காதர்; துணைப் பொருளாளர்: எம் குமார்; பிரச்சாரச் செயலாளர்: ஜி கோபால்; பிரதிநிதி: பி. ஆர். கருப்பைப்பா.

# விற்பனையாளர் தேவை

இதயத் தெய்வம் - பேரறிஞர் அண்ணுவின் கருத்துக் கருவூலமாம் 'காஞ்சி' வார இதழ், கவிஞர் புலமைப்பித்தன் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு மீண்டும் புதிய பொலிவோடு வெளிவருகிறது.

கழக மறவர்க்குக் கைவாளாக—கனித் தமிழ் மொழிக்கோர் அணிகலனுக—இலட்சியப் போர்ப்பரணி பாடும்! இலக்கியத் தேனருவி ஓடும்!

மலர் உட்பட ஆண்டுசந்தா ரூ 16
அரை ஆண்டு சந்தா ரூ. 8

குறிப்பு:—அண்ணனின் அமர காவியமான எழுத்தோவியங்கள் தொடர்ந்து இடம்பெறும்.

விவரங்களுக்கு:—
ஆசிரியர், 'காஞ்சி',
86, திருக்கச்சி நம்பித் தெரு,
காஞ்சிபுரம்-3.

# இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

## திருச்சிகிளை நிர்வாகிகள் தேர்தல்

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க திருச்சி ஓபன் லைன் கிளை நிர்வாகிகள் தேர்தல் 24—7—72 அன்று மத்திய சங்கப் பொருளாளர் எம். தங்கவேலு அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: எம். சுப்பிரமணியன்; செயலாளர்: மா. சாரங்கபாணி; பொருளாளர்: ம. சேட்டு: துணைச் செயலாளர்கள்: ஜி. பஞ்சநாதம், டி. அஸ்வத்தராமன, பி தில்லைநாயகம்; பொதுக்குழு உறுப்பினர்: எஸ். பெரியசாமி; மத்திய சங்கப் பேரவை உறுப்பினர்கள்: எம். சீதாராமன், பி நாகராசன்; மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

## மதுரை தலைமைக் கிளை பேரவைத் தேர்தல்

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மதுரைத் தலைமைக் கிளைப் பேரவை நிர்வாகிகள், 2—8—72-ல் மா. நடராசன் அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெற்றது; அதுபோது அப்துல் அமீது தலைவராகவும், மாணிக்கம் செயலாளராகவும், சுப்பிரமணியம் பொருளாளராகவும், நடராசன் -- வெங்கடசாமி --சீனிவாசன் ஆகியோர் துணைச் செயலாளராகவும், மற்றும் 25 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## மதுரைகிளை நிர்வாகிகள் தேர்தல்

இரயில்வே தொழிலாளர் முன்னேற்றச் சங்க மதுரை (திறந்த பாதை) கிளையின் நிர்வாகிகள் தேர்தல் 25—8—72-ல் மத்திய சங்கத் துணைத் தலைவர் வ. நம்மாழ்வார் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்:—

தலைவர்: வி. சுப்பிரமணியன்; செயலாளர்: பெரியகூடன்; பொருளாளர்: எம். சி. செல்லப்பா; துணைச் செயலாளர்கள்: சோலை. பின்னத்தேவர், குருசாமி; மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

# மாயூரம் நகர தி. மு. க. செயற்குழுக் கூட்ட முடிவுகள்

மாயூரம் நகர தி. மு. க. செயற்குழு கூட்டம் 27—8—72-ல் டாக்டர் கே. எஸ் சண்முகம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

மாயூரம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தாயார் அஞ்சலை அம்மாள்—காஞ்சிபுரம் தங்கவேல் முதலியார் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பேரறிஞர் அண்ணு — தந்தை பெரியார் பிறந்த நாள் விழாக்களை மிகச் சிறப்பாக 15—9—72 முதல் 21—9—72 முடிய மாயூரம் நகரப் பூங்காவில் நகர தி. மு. க. சார்பில் ஒப்புதல் அளித்த தலைவர்களை வைத்து மிகச் சிறப்பாக நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

விழாவினைச் சிறப்பாக நடத்த சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கிட்டப்பா அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பொறுப்பாளர் திரு. என். கிட்டப்பா நன்றி கூறினர்.

# தலைமை நீதிமன்றத்தில் கலைஞர் வாக்குமூலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நிகழ்ச்சியாக நான்சொல்ல விரும்புவது, எனது இராணுவச் செயலாளர் ஜெனரல் அப்ரீக் சிங் டெல்லியிலிருந்து தொலைபேசி மூலம் பாதுகாப்பு அதிகாரியை தொடர்புகொள்ள முயன்று அவர் கிடைக்காததால், இவரைத் தொடர்பு கொண்டபோது மரியாதை உணர்வைக் காட்டவில்லை.

இரவு 11-30 மணிக்குத்தான், தலைமைச் செயலாளர் அவருக்குத் தொலைபேசி மூலம் கிடைத்தார்.

## சமூக உணர்வை எந்தக் கட்டத்திலும் இழக்கக்கூடாது

மீண்டும் அவர் அவசர அவசியமான கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினைபற்றிக் கூறியபோது, 'இந்த நேரத்தில் என்னைத் தொந்தரவு செய்திருக்க வேண்டியதில்லை' என்று மரியாதைக் குறைவாகச் சொன்னார்--இந்தியக் குடியரசுத் தலைவரின் வருகை பற்றிய செய்தியினை மிகக் குறைத்து உணர்ந்து!

இரவானாலும்--பகலானாலும், முக்கியப் பிரச்சினைகளைப் பரிசீலிக்க நீங்களும் -- நானும், அரசாங்க அதிகாரிகள் எந்த நேரத்தில் அழைத்தாலும் கிடைக்கக் கூடியவராகவும், அழைக்கப்படும்போது மணியைத் தட்டிக் கழிக்காதவராகவும் இருக்க வேண்டும்.

தலைமைச் செயலாளர் எனது மகனிடம் நடந்துகொண்ட முறையும் -- குரலும் -- அவர் பேசிய முறையும், குறைத்துச் சொல்வதானால்கூட விரும்பத்தக்கதல்ல!

பத்திரிகையாளர்கள் இருக்கும்போது அவர் (தலைமைச் செயலாளர்), எனதுமகனிடம், 'அவர் குடியரசுத் தலைவரின் மகனாக இருந்தாலும்கவலையில்லை' என்று கூறியதாகவும், விமானத்திற்கு அருகில் போகவிடாமல் தடுக்கப்பட்டதாகவும் அறிகிறேன்.

கனிவு காட்டிட எந்த விலையும் கொடுக்கவேண்டியதில்லை; எல்லோருக்கும் மரியாதை உணர்வு காட்டவேண்டிய சமூக உணர்வை அதிகாரத்திலிருப்பகள் எந்தக் கட்டத்திலும் இழக்கக் கூடாது.

எதிர்காலத்திலாவது, தலைமைச் செயலாளர் தனது குறைகளை உணர்ந்துகொள்வார் என்றும்--எதிர்காலத்தில் தன்னிடம் வருபவர்களை நடத்துவதில் எச்சரிக்கையுடன் இருப்பார் என்றும் நம்புகிறேன்.

நட்பு உணர்வுள்ள வேண்டுகோளாக இந்தப் பிரச்சினையை இத்துடன் முடிக்கவும்; தங்களிடம் எனக்குள்ள உயர்ந்த மதிப்பு உணர்வு காரணமாக நானும் அவ்விதமே செய்கிறேன்"

## முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம் கடிதம்

**திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, அன்றைய தலைமைச் செயலாளர் இராமகிருஷ்ணன் அவர்களுக்கு எழுதிய கடிதம் வருமாறு:—**

எனதன்புள்ள இராமகிருஷ்ணன்,

வருவாய் வாரிய உறுப்பினர் இராயப்பாவைப் பற்றிய எனது பார்வையை உங்களது கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

அவர் எப்போதும் ஒரு அதிகாரியைப்போலல்லாமல் அரசியல்வாதியைப்போல் நடந்துகொள்கிறார்; பலமுறை என்னிடமே அவர் அரசியலைப் பற்றிப் பேசியிருக்கிறார்; அரசாங்கத்திற்கு உள்ளேயும்--வெளியேயும் இருக்கின்ற பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்து மற்றவர்களைப் பற்றிக் குறை பேசுகிறார்; அவரது அரசாங்க அலுவலகளுக்கு முழுதும் அப்பாற்பட்ட பிரச்சினைகளைப்பற்றிப் பேசுகிறார்.

தனிப்பட்ட முறையில் அவருக்கு எல்லாவிதமான தீய ஒழுக்கமும் இருக்கிறது; அவரது வருமானத்திற்கு மேல் சொத்துக்களைப் பெருந்திரளாகக் குவித்திருக்கிறார்.

இவரது மைத்துனர் (பொதுப் பணித் துறை சூப்பிரண்டெண்டிங் எஞ்சினீயர்) மீது குற்றஞ் சாட்டப்பட்ட திருவெறும்பூர் கொதிகலன் தொழிற்சாலை காண்டிராக்ட் ஊழல் வழக்குகளில் இவரும் சம்பந்தப்பட்டிருப்பார் என்று எனக்கொரு சந்தேகம் இருக்கிறது.

அந்த சூப்பரிண்டெண்டிங் எஞ்சினீயர் மீதுள்ள குற்றப் பத்திரிகையை எடுத்துவிடுமாறு இராயப்பா என்னிடம் கூறிக் கொண்டிருக்கிறார்.

போலீசு -- சட்டம் ஒழுங்குத் துறையைக் கவனிக்கும் துணைத் தலைமைச் செயலாளராகத் தன்னை நியமிக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நிர்வாகத்தின் மிக உயர்ந்த பாரம்பரியத்திற்கு மாறாக இராயப்பா போன்ற மூத்த அதிகாரியை நாம் பெற்றிருப்பது உள்ளபடியே துரதிருஷ்டமானதாகும்.

இராயப்பாவின் தனிப் பதிவேட்டில் இந்தக் குறிப்பு இணைக்கப்படலாம்."

## வருவாய் வாரிய உறுப்பினர் கெய்வார் குறிப்பு

**வருவாய்த்துறை வாரிய முதல் உறுப்பினர் எஸ். ஆர். கேய்வார், அன்று வருவாய்த்துறை வாரியத்தின் தற்காலிக உறுப்பினராக இருந்த இ. பி. ராயப்பா பற்றி எழுதிய குறிப்பு வருமாறு:—**

"திரு. இராயப்பாவுக்கு ஐ.ஏ.எஸ். பதவி 1943-ல் கொடுக்கப்பட்டது; 1964 சனவரி 29-ல் முதன் முறையாக அவர் வருவாய்த்துறை வாரியத்திற்கு வந்தார்; 14 ஆண்டுகள் வருவாய்த் துறையில் தொய்வில்லாத வாய்ப்பு, வருவாய்த்துறை வாரியத்தில் தரப்பட்டிருக்கிறது.

அவர் போதுமான அளவுக்குத் தன்னோட்டமும் -- சக்தியும் வாய்ந்த அதிகாரி என்னும் விளம்பரத்தில் ஒரு கண் கொண்டவரும் -- தன்னைத்தானே முன்னுக்குத் தள்ளிக்கொள்பவரும் ஆவார்.

தனது தப்பட்டையைத் தானே அடித்துக் கொள்வதில் அவர் சோர்வடைந்ததே இல்லை!

போதுமானதும் -- நியாயமானதுமான காரணம் ஏதுமின்றித் தன்னைச் சுற்றியுள்ள அனைவரையும் புண்படுத்தச் செய்ய அவரால் முடியும்.

### நிதானமற்ற கண்ணோட்டம் கொண்டவர்-- புண்படுத்துபவர்

தன் கருத்தை வெளியிடும் சக்தி அவருக்கு மிகக் குறைவு; அவரது சொல் வளமும் ஒரு எல்லைக்கு உட்பட்டதேயாகும்.

1966 ம் ஆண்டின் பெரும் பகுதியில் அவசியமில்லாமல் தனது சகாக்களைப் புண்படுத்தினார்!

அவர் வகிக்கும் மூத்த அதிகார பீடத்திலிருந்தும் -- தற்போது வகிக்கும் பதவியிலிருந்தும் எதிர்பார்த்த -- உரிமை படைத்த மரியாதையையும் மதிப்பையும் குறைத்துக் காட்டினார்.

அவரது கண்ணோட்டங்கள் அதிதீவிரமானவை--பல வேளைகளில் நிதானமற்றவை!

தனக்கு எதிரான கருத்து இருக்கலாம் என்றோ, கௌரவமான—நியாயமான எதிர்க்கருத்து இருக்கக்கூடும் என்றோ அவரால் ஒத்துக்கொள்ள முடியவில்லை! தன்னிடமிருந்து மாறுபட்டவர்கள் மீது அவர், பொதுவாகவே உள்நோக்கம் கற்பிப்பார்!

அவரது குறிப்புக்களின் தன்மையும் -- உள்ளடக்கமும் பெரும்பாலும் முறைகேடானது; படுமோசமான சுவை கொண்டவை; கட்டுப்பாடற்ற மொழியும், குறிப்பாகப் புண்படுத்தும் ஆட்சேபகரமான நிந்தனையும் அவர் அடிக்கடி பயன்படுத்துவையாகும்.

சுருக்கமாக தனது சகாக்களின் மரியாதையை அவர் பெறவில்லை; அண்மைக் காலமாக அவர், வழக்கமாக இருக்கும் புண்படுத்தும் தன்மையைக் குறைத்திடும் போக்கைக் கையாளுகிறார்.

தன் முன்னால் இருக்கும் பிரச்சினைகளைக் கவனிக்கும் கண்ணியத்தையும், பின் கருத்தை வெளியிடுவதில் நிதானத்தையும் அவர் காட்டாமல் இருந்துவிடுவார்.

சுயமரியாதையுள்ள வாரிய உறுப்பினர்கள், பெரும்பாலான வேளைகளில் இணைந்து செல்ல முடியாத அதிகாரி திரு. இராயப்பா.

இணைந்திருந்த சென்னை இராஜதானி -- சென்னை -- ஆந்திரா -- ஆந்திரப் பிரதேசம் -- மத்திய அரசு ஆகியவற்றில் முப்பத்திரண்டு ஆண்டுகளாகப் பணிபுரிந்த எனக்கு, இணைந்து பணிபுரியாமற்போன இரண்டு அதிகாரிகளில் இவர் ஒருவர்.

அவரது கவுரவத்தைப் பாதிக்கும் நிலை விஷயங்களின் கொள்கைகளிலும் அவர் மதிப்புத் தரவில்லை.

அவரது மனைவி அரசுக் கடன்களுக்கு மிக அதிகமான நிலுவை செலுத்தவேண்டும்.

ஒருசமயம் ரூ. 30,000 செலுத்த வேண்டியிருந்தது; இதில் குறைந்தகாலக் கடன்களுக்கான நிலுவை சேர்க்கப்படவில்லை.

(அவர்) முழுக்க முழுக்க விரும்பத் தகாதவர்! அவர் அதிகாரியுமல்லர் -கனவானுமல்லர்!

## சர்தார் உஜ்ஜல் சிங் வாக்குமூலம்

தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் தலைமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 'இ. பி. இராயப்பா என்னுடைய பெயரையும்--அப்போதைய மாநிலப் போலீசுத் துறைத் தலைவரின் பெயரையும் சம்பந்தப்படுத்தித் தலைமை நீதிமன்றத்தின்முன் கூறியுள்ள தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை' என்று குறிப்பிட்டிருக்கிறார்; அவர் கூறியிருப்பதாவது:—

**"திரு. கருணாநிதி சொன்னதன்பேரில் 1500 குண்டர்கள் மதுரையிலிருந்து சைதாப்பேட்டைக்கு வந்திருக்கிறார்கள் என்று 1971-ம் ஆண்டுத் தேர்தல் நேரத்தில் மாநில ஆளுநராக இருந்த உஜ்ஜல் சிங் அவர்களிடம் அப்போதைய போலீசு ஐ ஜி. தெரிவித்தார் என்று இராயப்பா சொல்லியிருப்பது தவறு; இப்படி என்னிடம் ஐ. ஜி. எதுவும் கூறவில்லை."**

# வேலை வாய்ப்பு விரைவுத் திட்டங்கள்

## 'நொறுங்கி விட்டது' என்ற கருத்தை மத்திய அமைச்சர் ஏற்கவில்லை

### புள்ளிவிவரங்களைத் துல்லியமாக மதிப்பிட்டு அறிவது சிரமமாம்

புதுடில்லி, செப். 2—

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் பற்றி நாடாளுமன்ற மேலவையில், உறுப்பினர்கள் பலர் சரமாரியாகக் கேள்விகள் கேட்டனர்.

"இந்த நடவடிக்கைகள், கேலிக்கூத்தானவை – கொஞ்சம் கூடப் போதுமானவையல்ல" என்றும் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இந்தத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றித் தொழிலாளர் நல அமைச்சர் காடில்கரும் -- துணையமைச்சர் பால கோவிந்த வர்மாவும் அளித்த பதில்கள் உறுப்பினர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை.

அமைச்சர் மேலும் கூறியதாவது:—

"வேலைவாய்ப்புக்கான விரைவுத் திட்டங்கள், நொறுங்கிப் போய் விட்டன" என்று அண்மையில், புகழ்பெற்ற பம்பாய் பொருளாதார நிபுணர் டாக்டர் கே. என். ராஜ் கூறியதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

"வளர்ச்சியடைந்துவரும் ஒரு சமூகத்தில், வேலை வாய்ப்புகள் பற்றித் துல்லியமாகப் புள்ளி விவரங்களை மதிப்பிட்டு அறிவது சிரமமாகும்; கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் திருப்திகரமானவையா – அவற்றினால் ஏற்பட்டுள்ள பலன்கள் என்ன – என்பதையெல்லாம் நன்கு ஆராய்ந்த பின்னர்தான் சொல்ல முடியும்" என்றும் அவர் கூறினார்.

# குறைந்தபட்ச போனசை

## உயர்த்தக் கோரும் தனி நபர் மசோதா

### மக்களவையில் நிராகரிப்பு

புதுடில்லி, செப். 2—

குறைந்தபட்ச போனசை 4 சதவிகிதத்திலிருந்து 8.35 சதவிகிதமாக உயர்த்தக் கோரும் தனி நபர் மசோதா ஒன்றை, மக்களவை நிராகரித்தது.

மசோதாவுக்கு ஆதரவாக 36 வாக்குகளும் -- எதிராக 109 வாக்குகளும் கிடைத்தன.

போனசு பட்டுவாடா சட்டத்துக்குத் திருத்த மசோதாவாக சோஷலிஸ்டு உறுப்பினர் மதுதந்தவாடே இதைக் கொண்டுவந்தார்.

எல்லா அரசுத் துறை நிறுவனங்களுக்கும் போனசு சட்டம் பொருந்தவேண்டும்; போனசுக்கு அதிகபட்ச வரம்பு கூடாது என்று இம்மசோதா கூறியது.

அரசு அமைத்த பரிசீலனைக் குழு, போனசு சட்டத்தில் திருத்தம் செய்வது பற்றிய பல்வேறு பிரேரணைகளை ஏற்கனவே பரிசீலித்து வருவதால் இம்மசோதாவை திரும்பப் பெறும்படி தொழிலாளர் நல அமைச்சர் கடில்கர் கேட்டுக் கொண்டார்.

தந்தவாடே மசோதாவைத் திரும்பப் பெற மறுத்துவிட்டார்; ஆனால், பொதுமக்கள் கருத்தை அறிய அனுப்பி வைக்கலாமென்று கூறினார்; இதை அமைச்சர் ஒப்புக்கொள்ளவில்லை.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

4--9--72

**புதுக்கோட்டை**

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: எம். எஸ். வெங்கடாசலம்; பேசுவோர்: அமைச்சர் டாக்டர் நாவலர், அ. தியாகராச காடுவெட்டியார் எம்.எல்.ஏ., க. வீரையா எம்.பி., சி. தமிழரசி எம். சி., அ. பெரியண்ணன், பா. செழியன் எம்.சி., க. சிங்கமுத்து, ந. மீனாட்சிசுந்தரம், எம். எஸ். அப்துல் மஜீத் எம்.சி.

## காஞ்சிப் பெருநகர தி.மு.க.பொது உறுப்பினர்கட்டு:

"பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது ஆண்டு பிறந்த நாள் விழா குறித்துக் கலந்தாலோசிப்பதற்குக் காஞ்சிபுரம் பெருநகரத் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் 4—9—72 இரவு 9-மணியளவில் காஞ்சி நகராட்சிப் பயணிகள் விடுதியில் அவைத் தலைவர் சி. எஸ். பூஞ்சோலை தலைமையில் நடைபெறும்" என்று நகர தி.மு.க. செயலாளர் டி. மாணிக்கம் அறிவிக்கிறார்.

## இலங்கைத் தமிழர் முன்னணித் தலைவர் தமிழகம் வருகை

கொழும்பு, ஆம். 2—

இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து இந்தியத் தலைவர்களிடம் எடுத்துரைப்பதற்காக இலங்கைத் தமிழர் முன்னணியின் பொதுச் செயலாளர் ஏ. அமிர்தலிங்கம் இந்தியாவுக்கு வருவதற்கு முடிவு செய்துள்ளார்.

இன்று அவர் கொழும்பிலிருந்து புறப்படுகிறார்; முதலில் சென்னைக்கு வந்து, முதலமைச்சர் கலைஞர் -- மற்றும் கழகத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

பின்னர் டில்லிக்குச் சென்று மத்திய அரசுத் தலைவர்களுடன் விவாதிப்பார்; இயன்றால், தலைமையமைச்சர் இந்திராவையும் சந்தித்துப் பேசுவார்.

காந்தி பிறந்த தினமான அக்டோபர் 2-ந் தேதி முதல் அமைதியான முறையில் கிளர்ச்சி துவங்குவதற்குத் தமிழர் முன்னணி திட்டமிட்டிருக்கிறது.

## பாம்பன் -- இராமேசுவரம் இணைப்புச் சாலை

### சீர்செய்யும் பணி பற்றி அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக. 31—

பாம்பன் இராமேசுவரம் இணைப்புச் சாலையைச் சீர்செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகையாக 1970 மார்ச் மாதம் ரூ. 9.43 இலட்சம் வழங்கப்பட்டது; இந்தச் சாலை சீரமைப்புப் பணிகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன; 1972 மார்ச் முடிய இப்பணிக்கு ரூ. 7.75 இலட்சம் செலவிடப்பட்டது.

நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் தில்லை வில்லாளனின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், இணை அமைச்சர் ஓம் மேத்தா இதனைத் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] வெளியிடப்பெற்றது.